
# தமிழியல் ஆய்வுத் தடங்கள்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)




பதிப்பாசிரியர்கள்

ப. ஆனந்தகுமார்

கு. கார்த்திகா

ஆ. ரூபா

ம. வித்யா

**தமிழியல் ஆய்வுத் தடங்கள்**
**(தேசிய கருத்தரங்கக் கட்டுரைகள்)**

முதல் பதிப்பு : மார்ச் 2016

உரிமை : பதிப்பாசிரியர்கள்

பக்கங்கள் : 888

வெளியீடு : **போதிவனம்**
அகமது வணிக வளாகம், தரைத்தளம்,
12/293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
அலைபேசி: +91 - 9841450437
bodhivanam@gmail.com

நூல் வடிவமைப்பு : கே.எஸ். கருணா பிரசாத்

விலை : **600**

**Thzmizhiyal Aaivu Thadangal**
**(Research papers presented in National Seminar)**

First Edition : March 2016

Copyright : Editors

Pages : 888

Publisher : **Bodhivanam**
Ahmed Complex Ground Floor,
12/293, Royapettah High Road,
Royapettah, Chennai-600 014.
Mobile : +91 - 9841450437

Design : K.S. Karuna Prasad

Price : **600**

ISBN No. : 978-93-80690-36-0

| | | |
|---|---|---|
| 109. முத்துச்செல்வி.சி | புதுக்கவிதையில் இயக்கச் சிந்தனைகள் | 665 |
| 110. முருகானந்தம்.இரா | கோட்பாட்டு நோக்கில் தலித் இலக்கியம் | 673 |
| 111. மேனகா.ஜெ | பரிபாடலில் – கணிதம் | 686 |
| 112. மோகன்.கோ | தமிழில் தலித்திய ஆய்வுக்கான முன்னெடுப்புகள் | 691 |
| 113. மோகன்காந்தி.க | ஆய்வாளர்கள் பார்வையில் நன்னனும் நன்னன் சேய் நன்னனும் | 698 |
| 114. மோகனா.இரா | சமூக இயக்கங்களின் ஊடாகப் பெண்ணியப் பார்வையில் மண்மகன் | 703 |
| 115. யாழினி.கோ | சங்க இலக்கியத்தில் “ஆதிமந்தி” | 709 |
| 116. ராஜா.பொ | பதிப்பு வெளியில் ஆய்வுகள்: முன்னெடுக்காமையும் முன்னிறுத்தாமையும் | 714 |
| 117. ரேணுகா.நா | தமிழியல் ஆய்வுலகில் ச.வையாபுரிப்பிள்ளை | 718 |
| 118. ரூபா.ஆ | கார்த்திகேசு சிவத்தம்பியின் மொழிக் கற்பித்தல் குறித்த ஆய்வு முறையும் நடைமுறைச் சிக்கல்களும் | 724 |
| 119. லட்சுமிபிரியா.மா | நவீனத் தமிழ்இலக்கிய கோட்பாடு இயக்கங்கள் | 729 |
| 120. லதா.க | திறனாய்வாளர்களும் சிலப்பதிகாரமும் | 734 |
| 121. லயோலா சூலியட் மேரி.பா | வர்க்க முரண்பாடு | 738 |

# வர்க்க முரண்பாடு

முனைவர் பா. லயோலா ஜூலியட் மேரி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் காலந்தோறும் புதுப்புது இலக்கியங்கள் தோன்றி வருகின்றன. இவ்வாறு தோன்றும் இலக்கியங்கள் அந்தந்தப் பகுதி மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டே வெளிவருகின்றன. இதன் அடிப்படையில் பல சிறுகதைகள் மனித வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடாக அமைந்து சமூகத்தின் போக்குகளைப் பல நிலைகளில் பதிவு செய்கின்றனர். இந்தவகையில் மக்கள் எழுத்தாளர் என்று போற்றப்படும் சிறப்புடையவர் விந்தன் ஆவார்.

மனிதர் தோன்றிய காலம் முதலாக மனிதர்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சமுதாயத்தில் மலிந்து கிடக்கின்றன. அந்த ஏற்றத் தாழ்வுகள் எல்லை மீறுகின்றபொழுது மனிதப் பண்புகள் மாற்றம் அடைகின்றன. மனிதாபிமானம் ஓடி ஒளிந்து கொள்கிறது. இந்த வர்க்க முரண்பாடுகள் தோன்றுவதற்கு முன் மனித நாகரிகத்தின் தொடக்க காலத்தில் கூட்டு வாழ்க்கை முறையே நிலவி வந்தது. மனிதன் கல்லாலும் மரத்தாலும் செய்யப்பட்ட கருவிகளையும் ஆயுதங்களையும் பயன்படுத்தி மிகப்பெரிய விலங்குகளைக்கூட வேட்டையாடினான். அவ்வாறு வேட்டையாடப்பட்ட விலங்குகளின் இறைச்சி, காட்டில் கிடைத்த கிழங்குகள், கனிகள் ஆகியவற்றை உணவாக உட்கொண்டு வாழ்ந்து வந்தான். காலப்போக்கில் இத்தகைய இனக்குழு சமூகம் சிதைந்து வர்க்கங்கள் உருவாகத்தொடங்கின. இனக்குழுக்களுக்கு இடையே அடிக்கடி சண்டைகள் நடைபெற்றன. சண்டையில் தோற்றவர்கள் கொல்லப்பட்டனர். தோற்றவர்களைத் தங்கள் சமூகத்தில் சேர்த்துக்கொள்ள வெற்றி பெற்றோர் தயாராக இல்லை. தோற்றவர்களைப் பராமரிக்கவோ அவர்களுக்கான உணவுகளைத் தரவோ வென்றவர்களால் இயலவில்லை. எனவே தோற்றவர்கள் வெற்றி பெற்றோரின் அடிமைகளாக மரினர். அடிமைகள் அதிகமாக உழைக்கும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கான அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டன. இந்த அமைப்பு சமுதாயத்திலும் ஏற்றத்தாழ்வினை விதைத்தது. ஆகவே தொழில் அடிப்படையில் பிரிவுகள் தோன்றி விவசாயத்தில் இருந்து கைத் தொழில்கள் பிரிந்தன. தொழில் திறமை பெற்றவர்கள் சமூகத்தில்